<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 30/2021</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வீரக்குமார் | P.W.1. Cross |
| த/பெ. | : | பெரமசாமி | |
| தேதி | : | 05.03.2026 | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

1. நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எனது காசோலையை எடுத்து ரூ. 40 லட்சம் நான் அவரிடம் கடன் பெற்றதாக கூறி காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியை எனக்கு 2016ம் ஆண்டு முதல் தெரியும். பிரதிவாதி பொறியியல் படிப்பில் முனைவர் பட்டம் பெற்றவர் என்றால் சரிதான். பிரதிவாதி எங்கள் குடும்பத்திற்கு ஆண்டனி என்ற ஐஸ் பேக்டரியை நிறுவி கொடுத்தார் என்றால் சரிதான். ஐஸ் பேக்டரி உள்ள இடத்தை நான் பிரதிவாதியிடமிருந்து கிரய பெற்றுள்ளேனா என்றால் நான் கிரயம் பெறவில்லை. எனது அண்ணன் தமிழ் மணி தான் கிரயம் பெற்றுள்ளார்.

2. இந்நீதிமன்றத்தில் பிரதிவாதி எனக்கு எதிராக 2 காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் ஆண்டனி நிறுவனம் சரியாக நிறுவப்படவில்லை அதில் குறை உள்ளது என கூறி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பெருமாள்பேட்டையை சேர்ந்த VRS (எ) ராஜசேகரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த ராஜசேகரின் வங்கி கணக்கிற்கு ரூ. 10 லட்சத்தை பிரதிவாதி எனது உத்தரவின் படி அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே முன்விரோதம் உள்ளதா என்றால் உள்ளது. நான் சேமிப்பு கணக்கு வைத்துள்ள பூவம் கிளை கனரா வங்கியில் 3 புத்தகம் காசோலைகள் வாங்கியுள்ளேன். ஒவ்வொரு புத்தகத்திலும் எத்தனை காசோலைகள் உள்ளன என்றால் தற்போது நினைவில் இல்லை.

3. எனது வீட்டிற்கும் டிஆர் பட்டினத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 15 கிமீ தொலைவு இருக்கும். 20.10.2019 அன்று நான் டிஆர்

பட்டிணத்திற்கு எனது சொந்த வேலையாக சென்றேனா அல்லது தொழில் ரீதியாக சென்றேனா என்றால் தொழில் ரீதியாக சென்றேன். நான் தற்போது மீன் வியாபாரம் செய்து வருகிறேன். நான் டிஆர் பட்டிணத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் விற்பனைக்காக மீன் வாங்க சென்றேன். நான் இருசக்கர வாகனத்தில் சென்ற போது Cheque Bookஐ மஞ்ச பையில் வைத்து இருசக்கர வாகனத்தில் மாட்டி இருந்தேன். எனது Cheque Book தொலைந்து போனது எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 20.10.2019 அன்று நான் மீன் வாங்கிவிட்டு விற்பனை செய்தவருக்கு காசோலை கொடுப்பதற்காக பார்த்தபோது தான் எனக்கு தெரியவந்தது. அந்த காசோலையானது டிஆர் பட்டிணம் காவல் நிலையத்தின் அதிகார வரம்பில் தான் எனது காசோலைகள் தொலைந்ததா என்றால் காசோலை காணாமல் போனது வடகரையில் தெரியவந்ததால் நான் டிஆர் பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

4. 20.10.2019 அன்று நான் கொடுத்த புகாரில் எனது சொந்த வேலையாக டிஆர் பட்டிணத்திற்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகாரில் காணாமல் போன காசோலைகளை நான் எனது இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரில் வைத்திருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகாரில் நான் வீட்டிற்கு வந்த பிறகு தான் காசோலை காணாமல் போன விபரம் எனக்கு தெரியவந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகாரில் 342927 முதல் 924073 வரைக்கான காசோலை எண்கள் காணாமல் போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே புகாரில் 344601 முதல் 344643 வரைக்கான காசோலை எண்கள் காணாமல் போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மொத்தம் 5,81,351 காசோலைகள் தொலைந்து போனதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 21 காசோலைகள் தொலைந்து போனதாக சொல்லியுள்ளேன். 344601 முதல் 344643 வரைக்கான காசோலை எண்கள் மொத்தம் 42 காசோலைகள் காணாமல் போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. சந்திரபாடியை சேர்ந்த சீனிவாசன் மகன் KSV மணிகண்டன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு எனது உத்தரவின் பெயரில் பிரதிவாதி ரூ. 5 லட்சத்தை மணிகண்டனின் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. 25.10.2019 அன்று நான் டிஆர் பட்டிணம் காவல் நிலையத்தில் காசோலைகள் காணாமல் போனதாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 20.10.2019 அன்று நான் புகார் கொடுத்தேன். புகாரை எந்த காவல் அதிகாரி பெற்றார் என்று அவர் பெயர் தெரியுமா என்றால் நினைவில் இல்லை. எனது புகாரை பெற்ற காவல் அதிகாரி பக்கிரிசாமி ASI

அவர்கள் குட்கா வழக்கில் சிறையில் உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. காசோலை Missing Certificate கொடுத்தவர் காவல் உதவி ஆய்வாளர் பெருமாள் ஆவார். அவர் தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் பணி ஓய்வு பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்பு தான் Missing Certificate கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆண்டனி ஐஸ் பேக்டரி கட்டுமானம், இயந்திரம் நிறுவுதல், அரசு அனுமதி உள்ளிட்டவை தொடர்பாக எழுத்து மூல ஒப்பந்தம் ஏற்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் தான் ஐஸ் பேக்டரி வைப்பதற்கு ரூ. 98 லட்சம் லோன் வாங்கியுள்ளேன் என்றால் நான் வாங்கவில்லை. எனது அண்ணன் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. அந்த 98 லட்சத்தில் ரூ. 25 லட்சத்தை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் தமிழ்மணி பிரதிவாதியிடமிருந்து ஐஸ் பேக்டரிக்காக கிரய பெற்ற இடத்திற்கு வடக்கு திசையில் உள்ள பிரதிவாதியின் இடத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றுள்ள இடத்தில் ஐஸ் பேக்டரி கட்டி வருகிறேனா என்றால் இல்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**